அ.வ.எண் : 491/2001

தேதி : 24/02/2021

பெயர் : ஞானசம்பந்தம்

நேரம் : முற்பகல் 12.35 முதல் 01.10 வரை.

வா..சா. 1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி (2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை)

தாவா சொத்து ஆதியில் ஒரு முத்துமணி செட்டியாருக்கு பாத்தியம் என்றால் சரிதான். தாவா சொத்து 4 பாகங்களாக உள்ளது. அதில் என்னுடைய மனைவி தங்கம்மாளுக்கு 2 பாகங்கள் பாத்தியப்பட்டது. தாவா சொத்தின் அருகில் உள்ள கீழாண்டை பாகம் என்னுடைய அக்காள் ஜெயலட்சுமி என்பவருக்கு பாத்தியப்பட்டதாகும். என்னுடைய அக்காள் ஜெயலட்சுமி என்பவர் தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 370/2001 என்றால் சரிதான். என்னுடைய அக்காள் ஜெயலட்சுமி என்பவர் அனுபவித்து வரும் சொத்தானது தாவா சொத்தின் ஒரு பகுதி ஆகும். அந்த சொத்து ஒரு சூரிய செட்டியாரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். சூரிய செட்டியாரிடமிருந்து கிரையம் பெற்ற சொத்திற்காகத்தான் ஜெயலட்சுமி என்பவர் மேற்படி வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்தும் என்னுடைய அக்காள் ஜெயலட்சுமியின் சொத்தும் வெவ்வேறானது என்றால் சரிதான். ஆனால் என்னுடைய அக்காள் ஜெயலட்சுமி என்பவர் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை அனுபவிக்காமல் எனக்கு பாத்தியப்பட்ட சொத்தில் அத்து மீறி வருகிறார். எனது தரப்பு ஆவணம் 1, 2 ல் உள்ள சொத்து விவரங்களும் இவ்வழக்கில் உள்ள சொத்து விவரங்களும் வெவ்வேறானது அதனால் இவ்வழக்கிற்கு தேவையான ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. நான்

எனது மனைவிக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வாதுரையில் உள்ள விவரங்கள் எனக்கு ஒரு சில சங்கதிகள் தெரியும். தாவா சொத்தின் அளவுகள் எனக்கு தெரியும். தாவாவில் தாவா சொத்தின் பரப்பளவு சுமார் 5776 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் 4 பாகங்களின் அளவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது. 4 பாகங்களில் நாங்கள் விலைக்கு பெற்ற 2 பாகத்தில் ஒரு பாகத்தின் அளவு 1444 சதுரடியும் மற்றொரு பாகத்தின் அளவும் இதே அளவாகும். இரண்டும் சேர்ந்து 2888 சதுரடியாகும். மேற்படி 2 சொத்துக்களும் 1996 ல் கிரையம் பெற்றோம். நான் 2 பாகங்களை விலைக்கு வாங்கும் போது பட்டா பார்த்து வாங்கினேனா என்றால் நான் பட்டா பாக்கவில்லை. நான் கிரையம் பெறும் போது அளவீடு செய்து கிரையம் பெறவில்லை. ஆனால் உயிலில் உள்ள அளவுகளின் படி நான் கிரையம் பெற்றேன். உயிலில் குறிப்பிட்டு அளவுகள் எதுவும் குறிப்பிடவில்லை. ஆனால் உயிலில் குறிப்பிட்ட சொத்தில் அசலொத்த மொத்த பகுதியில் சமபங்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தாவாவில் 1ம் அட்டவணை சொத்திற்கு நான்கெல்லைகள் விவரம் தெரியுமா என்றால் மேற்கில் பச்சையப்ப செட்டியாரின் காலி மனை உள்ளது. கிழக்கு பக்கம் சூரிய செட்டியாரின் பாகம் உள்ளது. தெற்கில் நாராயணசாமிபிள்ளை காலி மனை உள்ளது. வடக்கில் கம்மாள வீதி உள்ளது. வாதசாஆ1 ஆவணத்தில் சொத்து விவரத்திற்கு நான்கெல்லைகள் விவரம் தெரியுமா என்றால் முத்துமணி செட்டியார் எழுதி வைத்த உயிலுக்கு வடக்கு பக்கம் கம்மாளவீதி, தெற்கில் நாராயணசாமிபிள்ளை காலி மனை, கிழக்கில் தெரு பகுதி, மேற்கு பக்கமும் தெரு என்று குறிப்பிட்டு அதற்கு மத்தியில் நான்கு பாகங்களும் உள்ளடக்கி எழுதப்பட்டுள்ளது. வாசாஆ2 ஆவணத்தில் உள்ள சொத்து விவரம் ஒரு ஆறுமுகத்திடமிருந்து என்னுடைய மனைவி பெயரில் கிரையம் பெற்றதாகும். வாசாஆ2

ஆவணத்தில் உள்ள சொத்தை எழுதி கொடுத்தவர்கள் ஆறுமுகம் என்பவர் ஆவார். மற்ற அவரது குழந்தைகள் இளவர்களாக இருந்தார்கள். தாவாவில் 1ம் அயிட்ட சொத்திற்கு விஸ்தீரணம் 1290 சதுரஅடி என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான் ஆனால் சரியான அளவு கிடையாது. 2ம் அயிட்ட சொத்திற்கு விஸ்தீரணம் 1364 1/4 என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான் ஆனால் அது சரியானது அல்ல. மேற்படி அயிட்டம் 1, 2 ல் உள்ள சொத்து விவரத்தில் உள்ள அளவுகள் தவறானது என்று திருத்துவதற்கு முயற்சி செய்தோமா என்றால் அதனால்தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம். தாவா சொத்து குறித்து வழக்கறிஞர் ஆணையர் அளவீடு செய்ய மனு செய்தேனா என்றால் இல்லை.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளிக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி  ஒத்தி வைக்கப்படுகிறது.